பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 19 வெள்ளிக்கிழமை 03.01.2025 கதிர் 057

## மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பை எதிர்த்து அடுத்த வாரம் வழக்காம்

மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதைஎதிர்த்துநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. "இது தொடர்பான ஆளும்தரப்பின் தீர்மானத்தைஒருவாரத்துக்குள்உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தவுள்ளதாக" மகிந்தவின் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

மகிந்தவின்உயிருக்குஆபத்துள்ளது என்பதை நிரூபிக்கத் தேவையான அனைத்து ஆதாரங்களும் உயர் நீதிமன்றத்தில்சமர்ப்பிக்கப்படும்என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் நிதி விடயங்களை மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதை ஆளும்தரப்புத் தவிர்க்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புமுன்னாள்ஜனாதிபதிகளின் பாதுகாப்புஏற்பாடுகளைதிருத்தியமைத்து அவர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த இராணுவத்தினரை சேவையிலிருந்து நீக்கியது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை மற்றும் பாதுகாப்பு என இரண்டு விடயங்கள் உள்ளன. வாகனம், ஓய்வூதியம் போன்ற சலுகைகளை குறைத்தால் பிரச்சினை இல்லை. ஆனால் பாதுகாப்பு என்பது ஒரு சிறப்புரிமை அல்ல. அது ஒருவரது வாழ்க்கை சம்பந்தப்பட்ட விடயம். சில நாடுகள்தமதுமுன்னாள்ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காககோடிகோடியாகச்செலவு செய்கின்றன. பாதுகாப்பு முடிவுகள் எப்போதும் அச்சுறுத்தல் நிலைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும், நிதிக் கருத்தில் அல்ல, என்று அவர் கூறுகிறார்.

## தொழில் அமைச்சுக்கு புதிய வட்ஸ்அப் இலக்கம்

### முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க

தனியார் மற்றும் அரச சார்பு துறையின் ஊழியர்களின்சேவைகளை மிகவும் விரைவாக மேற்கொள்ளவதற்காக தொழில்அமைச்சினால்புதிய வட்ஸ்அப் இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகதொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்திடம் நிவாரணம் மற்றும் தலயீடு ☞ 8

## 85 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இதுவரை இறக்குமதி

இறக்குமதி அனுமதி பத்திரம் இல்லாமல் அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்ததன் பின்னர் நேற்று வரை இறக்குமதி செய்யப்பட்ட 85 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி பரிசோதனை செய்து துறைமுகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடக பேச்சாளரும் சுங்க மேலதி பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இறக்குமதி ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு இப்போதுதான் சபாநயகரின் 'கலாநிதி' பட்ட சர்ச்சையில் இருந்து அவரைப் பலிகொடுத்து வெளியே வந்திருக்கிறது. அதற்கிடையில் மற்றொரு சர்ச்சைக்குள்ளும் அது சிக்கிக்கொண்டுள்ளது.

விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தேசியக் கொடியை தவறான முறையில் ஏற்றினார் என்ற குற்றச்சாட்டு இப்போது எழுந்துள்ளது. முன்னாள் நாடாளுமன்ற ☞ 2

## கொழும்புப் பங்குச் சந்தை வரலாற்றில் பெரு வளர்ச்சி

கொழும்புப்பங்குச்சந்தையின்அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று 16,000 புள்ளிகளைக் கடந்ததுள்ளது.

16 புள்ளிகளை கடந்தது, இலங்கையின் மூலதனச் சந்தை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகக் கருதப்படுகிறது.

இதன்படி, அனைத்துப் பங்குகளின் விலைச் சுட்டெண் 403.94 புள்ளிகள் ☞ 2

## திறைசேரி அதல பாதாளத்தில் முன்னாள் சபாநயகர் தகவல்

திறைசேரி அதல பாதாளத்தில் உள்ளதாகத் தெரிவித்த முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வல, பாடசாலை மாணவர்களுக்கான சீருடை மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதில் ஆளும்தரப்பு மிகவும் ☞ 2

## பேருந்துக் கட்டணங்கள் ஜூலைக்குள் அதிகரிக்கும்

### தனியார் பேருந்து சங்க தலைவர் எச்சரிக்கை

எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் பேருந்துக் கட்டணங்கள் நிச்சயமாக அதிகரிக்கப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருளின்விலைகுறைக்கப்பட்டால் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு எரிபொருளின் விலை மாத்திரமன்றி வாகன உதிரி பாகங்கள் மற்றும் பொருட்களின் விலைகளையும் குறைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு மத்தியில் பேருந்து கட்டணத்தை நிச்சயம் திருத்தவேண்டும். பேருந்துகளின்விலைகள்அதிகரித்துள்ளன. அது மட்டுமல்ல, எரிபொருளின் விலை குறைக்கப்படும் என நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் ஒரு சில ரூபாய்களே குறைந்தது. அதைவிட முப்பது மடங்கு குறைக்க வேண்டும். நாங்கள்இப்போதுநட்டத்தில்இயங்கிக் ☞ 2

# ரணில், தினேஸை விசாரிக்க தயாராகி வருகிறது சி.ஐ.டி.

## மருந்து இறக்குமதி ஊழல், மோசடி தொடர்பில்

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும்முன்னாள்பிரதமர்தினேஸ்குணவர்தன ஆகியோரிடம் விசாரணை நடத்த குற்றப்புலனாய்வு திணைக்களம் தயாராகி வருகிறது.**

**கடந்த ஆட்சியில் சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல்ல மருந்து இறக்குமதியின் போது செய்தார் எனக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பிலேயே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

**தற்போது இந்தியாவிற்குச் சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க இலங்கை திரும்பிய பின்னர் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.**

**ரணில் மற்றும் தினேஸ் குணவர்த்தன இருவரிடமும் அவர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று வாக்குமூலங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

### திருகோணமலைக் கடலில்

## கண்டெடுத்த ஆளில்லா விமானத்தால் இலங்கைக்கு எந்தப் பாதிப்புமில்லை

திருகோணமலையை அண்மித்த கடலில் கண்டெடுக்கப்பட்ட இந்திய நிறுவனத்திற்கு சொந்தமான ஆளில்லா விமானம், இலங்கைக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இறுதி அறிக்கை விமானப்படை தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆளில்லா விமானத்தால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று அந்த ☞ 2

## புத்தாண்டை வரவேற்று பாற்சோறு சமைப்பதற்குக்கூட அரிசி இல்லை

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி சாடல்

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டிலுள்ளவேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்துவதைத் தவிர இந்த ஆளும்தரப்பு நாட்டு மக்களுக்காக என்ன செய்திருக்கிறது? 2025ஆம் ஆண்டை வரவேற்பதற்கு பாற்சோறு சமைப்பதற்கு அரிசியற்ற சூழலை மாத்திரமே இந்த ஆளும்தரப்பு உருவாக்கியிருக்கிறதுஎனஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அவர் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதியஆளும்தரப்புஆட்சியைப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்துள்ளன. இந்த 100 நாட்களில்தோல்வியடைந்த ☞ 2

## புலம்பெயர் தொழிலாளர், கைதிகள் வாக்குரிமைக்கும் ஏற்பாடு செய்க

### ஜனாதிபதிக்கு கடிதம் எழுதும் தேர்தல் ஆணைக்குழு

புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் சிறைக் கைதிகள் ஆகியோரின் வாக்குரிமையை உறுதி செய்யுறுமாறு கோரிக்கை விடுத்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மீண்டும் எழுத்துமூலமான கடிதமொன்றை அனுப்பவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின்தவிசாளர்ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசநாயக்கவெற்றிபெற்றதும்புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் சிறைக் கைதிகளின் வாக்குரிமையை உறுதி செய்வதற்கான சட்ட ☞ 2

## கைதிகளை சங்கிலியில் பிணைத்து நீதிமன்றுக்கு அழைத்து வராதீர்கள்

### கொழும்பு நீதிவான் அமரசேன வலியுறுத்து

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும்போது அவர்களை சங்கிலியால் பிணைக்கக் கூடாதென சிறைச்சாலை அதிகாரிகளிடம் கொழும்பு மேலதிகநீதிவான்பசன்அமரசேன வலியுறுத்தியுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளநபர்கள்மரியாதைக்குரிய மனிதர்கள் என்பதை நீதிவான் அதிகாரிகளுக்கு நினைவுபடுத்தினார்.

நேற்றையதினம் ☞ 2

## இனி இது .....

உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க இந்தக் குற்றச்சாட்டை எழுப்பியுள்ளார்.

புத்தாண்டுக்காக பத்தரமுல்லையில் உள்ள விவசாய அமைச்சில் நடைபெற்ற 'தூய சிறீ லங்கா' நிகழ்வில் நாமல் கருணாரத்ன தேசியக் கொடியை ஏற்றிய விதம் தவறானது என்பதே தற்போதைய சர்ச்சைக்குக் காரணம்.



பொதுவாக தேசியக் கொடியை அதிலுள்ள சிறுபான்மை இனங்களைக் குறிக்கும் இரண்டு நிறங்களுக்கு அருகில் கட்டி ஏற்றுவாரக்ள். ஆனால் விவசாயப் பிரதி அமைச்சர் ஏற்றிய கொடி அதற்கு மறுவழமாக சிங்கத்தின் வாலின் ஓரத்தில் கட்டி ஏற்றப்பட்டுள்ளது. நிகழ்வு தொடர்பான காணொலிக் காட்சியில் அது தெளிவாகவே பதிந்துள்ளது.

"நாட்டைச் சுத்தம் செய்ய முதல் சிறிய விடயங்களை சரியாகக் கற்றுக்கொண்டு தவறுகளை இழைக்காது செயற்பட வேண்டும்" என்று துமிந்த கூறியிருக்கிறார். இனியென்ன, ஜேவிபியினர் தேசியவாதிகள் இல்லை, அவர்கள் தேசியக் கொடியை அவமதித்துவிட்டார்கள் என்று போர்க்கொடி தூக்குவார்கள் எதிர்க்கட்சியினர். இதுஎவ்வளவு தூரம் போகிறது என்று பார்க்கலாம்.

.............................

இலங்கையின் நட்சத்திர தடகள வீராங்கனையும் 2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றவருமான சுசந்திகா ஜெயசிங்க தனது இரண்டு குழந்தைகளுடன் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் குடியேறத் தீர்மானித்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு இலங்கையை விட்டு வெளியேறிய அவர், தான் ஆஸ்திரேலியாவிலேயே நிரந்தரமாகக் குடியேறிவிடப்போகிறார் என்று நண்பர்களிடம் தெரிவித்துள்ளார். அவரது குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்திற்கு முன்னுரிமை அளித்து அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று அவரது நண்பர்கள் கூறுகின்றனர்.

சுசந்திகாவின் சமகால தடகள வீராங்கனையும், ஆசியப் பதக்கம் வென்றவரும், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றவருமான தமயந்தி தர்ஷாவும் சில ஆண்டுகளுக்கு முன்பு தனது குடும்பத்துடன் ஆஸ்திரேலியாவில் குடியேறியிருந்தார்.

49 வயதான சுசந்திகா ஜயசிங்க 100 மற்றும் 200 மீற்றர் போட்டிகளில் நிபுணத்துவம் பெற்ற ஓய்வு பெற்ற இலங்கையின் குறுந்தூர ஓட்டப்பந்தய வீராங்கனையாவார். 2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் 200 மீ. ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார், டங்கன் வைட்டிற்குப் பிறகு ஒலிம்பிக் பதக்கம் வென்ற இரண்டாவது இலங்கையர் என்ற பெருமையையும், குறுந்தூர ஓட்டப் போட்டியில் ஒலிம்பிக் அல்லது உலக சாம்பியன்ஷிப் பதக்கத்தை வென்ற முதல் ஆசியப் பெண்மணி என்ற பெரிமையையும் பெற்றவர் ஆனார்.

குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஒரே ஆசிய தடகள வீராங்கனை என்ற பெருமையையும் அவரே தக்கவைத்துள்ளார், உலக தடகள சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற முதலாவதும் மற்றும் ஒரேயொரு இலங்கையரும்கூட அவரேதான்.

சிட்னி ஒலிம்பிக்கில் அவர் பெற்ற வெள்ளிப் பதக்கம், 2020 கோடைகால ஒலிம்பிக்கில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கத்தை வெல்லும் வரை, 21 ஆண்டுகளாக தடகளப் போட்டியில் தெற்காசிய வீரருக்கான ஒரே ஒலிம்பிக் பதக்கமாக இருந்தது. 'ஆசிய பிளாக் மேர்' என்று செல்லமாக செல்லமாக அழைக்கப்படும் அவர், தடகளத்திற்குச் செய்த பங்களிப்புகளுக்காக கொண்டாடப்படுகிறார். நாட்டில் சர்ச்சைக்குரிய நபராகவும் கருதப்படுகிறார்.

.இடிமின்னல்

(idiminnal@gmail.com)

## கைதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்ற அறைக்குள் சங்கிலியால் பிணைக்கப்பட்ட சந்தேகநபர்கள் குழுவொன்றை அவதானித்த பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்தேகநபர்களை விலங்குகளைப் போல சங்கிலியால் கட்டி நீதிமன்றத்தில் முற்படுத்துவதில் எனக்கு உடன்பாடு இல்லை. அவர்கள் மனிதர்கள் என்றும் திறந்த நீதிமன்றத்தில் அவர் கூறினார்.

மேலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளை உரிய நடைமுறைகளுக்கமைய நீதிமன்ற அறையில் தடுத்து வைக்குமாறு மேலதிக நீதிவான் மேலும் அறிவுறுத்தினார்

## பேருந்துக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறோம்.

அதிக அளவில் குறைக்கப்பட்டால், அதன பயனை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

## கண்டெடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆளில்லா விமானம் இந்திய நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இது பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட்டதும் தெரியவந்துள்ளது. டிசெம்பர் 27 திருகோணமலைக்கு அருகில் உள்ள கடலில் இந்த ஆளில்லா விமானத்தை மீனவர்கள் குழு கண்டுபிடித்தது.

ஏறக்குறைய இரண்டு வாரங்களாக இந்த ஆளில்லா விமானம் கடலில் இருந்ததாகவும், அதனை மீண்டும் தொடர்புடைய நிறுவனத்திடம் ஒப்படைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 85 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட 85ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியில் பச்சை அரிசி 33ஆயிரம் மெற்றிக்தொன் மற்றும் அவித்த அரிசி 52ஆயிரம் மெற்றிக் தொன் அடங்குகிறது. சுங்கத்துக்கு மேலும் அனுப்பப்படும் இறக்குமதி செய்யப்படும் அரிசி மிக விரைவாக விடுவிக்கப்படும். இந்த 85ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியில் அரச நிறுவனமான அரச வாணிபகூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த 780 மெற்றிக் தொன் அரிசியும் உள்ளடங்குகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசவானிபகூட்டுத்தாபனம் மொத்தமாக 20 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்வதற்கு கொள்வனவு கட்டளை கோரி இருப்பதாகவும் அந்த அரிசி தொகை 5200 மெற்றிக் தொன் என்ற அடிப்படையில் நான்கு கட்டங்களாக இறக்குமதி செய்யப்படும் எனவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவீந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டரிசியே இவ்வாறு கொள்வனவு செய்யப்படுகிறது. ஏப்ரல் புத்தாண்டின்போது அரிசி பிரச்சினை தீர்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## புத்தாண்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் அரசாங்கமாக இதனை மக்கள் எண்ணத் தொடங்கிவிட்டனர்.

24 மணித்தியாலங்களில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைப்பதாகக் கூறியவர்கள் 100 நாட்கள் கடந்தும் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

மூன்றில் இரண்டுக்கும் அதிக பெரும்பான்மையுடைய இந்த ஆளும்தரப்பு செய்யமுடியாததை, சிறுபெரும்பான்மையைக் கொண்டிருந்த நல்லாட்சிக் காலத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தில் நாம் செய்து காட்டினோம்.

2025ஆம் ஆண்டை வரவேற்பதற்கு பாற்சோறு சமைப்பதற்கு அரிசியற்ற சூழலையே இன்று இந்த ஆளும்தரப்பு உருவாக்கியிருக்கிறது.

அரிசி ஆலை உரிமையாளர்களை மண்டியிடச் செய்வோம் எனச் சபதமிட்ட ஆளும்தரப்பினர் இன்று அரிசியின் விலையை அதிகரித்து அவர்களுக்குச் சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது.

போர்க் காலத்தில்கூட இவ்வாறானா பிரச்சினைகள் காணப்படவில்லை. ஜே.வி.பி. கலவரத்தின்போது அரிசி ஆலைகளுக்கு தீ வைக்கப்பட்ட போதிலும், அரிசி தட்டுப்பாடு ஏற்பட அப்போதைய ஆளும்தரப்புக்கள் இடமளிக்கவில்லை.

கடந்த ஆளும்தரப்பால் இணக்கப்பாடு எட்டப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்துவதைத் தவிர இந்த ஆளும்தரப்பு மக்களுக்காக வேறு எதனையும் செய்யவில்லை.

மக்கள் நிவாரணங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, ஆளும்தரப்பின் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமக்கான தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக முரண்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

## கொழும்புப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்து 16,348.55 புள்ளிகளாகப் பதிவானது. முந்தைய வர்த்தக தினத்துடன் ஒப்பிடுகையில் இது 2.53 சதவீத வளர்ச்சியாகும்.

மேலும், வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின் மொத்த புரள்வு 12.86 பில்லியன்களாக பதிவாகி உள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

## புலம்பெயர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரி உத்தியோகபூர்வமான கடிதமொன்றைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ரத்நாயக்க அனுப்பி வைத்திருந்தார்.

இதுசம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி மீண்டும் கடிதமொன்றை அனுப்பவுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதியிடம் புலம்பெயர் தொழிலாளர் மற்றும் சிறைக்கைதிகள் ஆகியோரின் வாக்குரிமையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரியிருந்தேன். அப்போது சட்ட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி கூறியதோடு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

இந்த ஆண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆகவே விரைந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் குறித்த இரு தரப்பினருக்குமான வாக்குரிமையை உறுதி செய்ய முடியும்.

அந்த வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மீண்டும் குறித்த விடயத்தினை வலியுறுத்தி எழுத்து மூலமான கோரிக்கையை விடுக்கவுள்ளோம் என்றார்.

## தொழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரி பொது மக்களால் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுப்பதற்காக 0707227877 என்ற வட்ஸ் அப் இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

தொழில் திணைக்களத்தின் பிரதான நோக்கம் தொழில் அமைதியை பேணிச்செல்வது மற்றும் அதனை மேலும் பலப்படுத்துவதாகும். அத்துடன் இந்த நாட்டின் தனியார் மற்றும் அரச சார்பு துறை ஊழியர்களின் சேவைப் பிரச்சினைகளுக்கு விரைவாக நிவாரணம் பெற்றுக்கொடுப்பதுமாகும்.

அதன் பிரகாரம் பொது மக்களின் காலம் மற்றும் செலவை கட்டுப்படுத்தல் மற்றும் விரைவாக பதில் அளிப்பதை மேன்படுத்துவதற்கும் அதிகாரிகளின் கால நேரத்தை முகாமைத்துவம் செய்துகொள்ளும் வசதிக்காகவும் இந்த வட்ஸ் அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தொழில் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.



# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்ககோரி மல்லாவி நகரில் கையெழுத்துப் போராட்டம்









நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மல்லாவி நகரில் கையெழுத்து போராட்டம் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மல்லாவி நகரில் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்தகையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு மகஜராக ஜனாதிபதிக்கு கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நீதிமன்றுக்கு முன்பாக வைத்து சாட்சியை வாளால் வெட்டமுயன்ற சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு ஒன்றுக்கு சாட்சிக்காக வந்த நபரை வாளால் வெட்ட முயற்சித்த பிரதான சந்தேகநபர் ஒருவர் நேற்று (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

வாள்வெட்டு வழக்கு ஒன்றின் சாட்சிக்காக கடந்த 2024.05.30 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு வந்த நபரை, நீதிமன்றத்துக்கு முன்னால் வைத்து வாளால் வெட்டி தாக்க முற்பட்ட மூவரில் இருவர் அன்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் தலைமறைவாகி இருந்த பிரதான சந்தேகநபர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் - ஆரியகுளத்தக்கு அருகில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவருக்கு வாள்வெட்டு தொடர்பாக மூன்று திறந்த பிடியாணைகள் உள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைக்க இந்திய அரசு உதவி

யாழ். மாவட்டத்தில் காரைநகர் படகு கட்டுமான தளத்தை புனரமைப்பதற்கு இந்தியா-இலங்கை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

காரைநகர் படகு கட்டுமானத்தளத்தை புனரமைப்பதற்கு இந்தியா 290 மில்லியன் ரூபாவை நிதியாக வழங்குகிறது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் எச்.ஈ. சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவிற்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் எச்.இ.க்ஷேனுகா திரேனி செனவிரத்ன ஆகியயோர் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி கையெழுத்திட்டுள்ளனர்.

வரையறுக்கப்பட்ட சீனோர் நிறுவனத்திற்குரிய காரைநகர் படகு கட்டுமான நிலையத்தின் புனரமைப்பிற்காக நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல், தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை பெறுகை செய்தல் போன்றவற்றுக்காக நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

படகு கட்டுமானத் தளம் புனரமைக்கப்பட்டதும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதார வாய்ப்புகளைப் பெருக்கவும் படகுத் தளத்தைச் சுற்றியுள்ள சிறிய நிறுவனங்கள் உட்பட அப்பகுதியில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் மேலும் தரமான மீன்வளப் பொருள்களின் விநியோகத்தை மேம்படுத்தவும் உதவும்.







# 2024ஆம் ஆண்டில் இலங்கைக்கு 20 லட்சம் சுற்றுலாவிகள் வருகை

கடந்த 2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 2,053,465 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஜனவரி மாதத்தில் 208,253 சுற்றுலாப் பயணிகளும், பெப்ரவரி மாதத்தில் 218,350 சுற்றுலாப் பயணிகளும், மார்ச் மாதத்தில் 209,181 சுற்றுலாப் பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் 148,867 சுற்றுலாப் பயணிகளும், மே மாதத்தில் 112,128 சுற்றுலாப் பயணிகளும், ஜூன் மாதத்தில் 113,470 சுற்றுலாப் பயணிகளும், ஜூலை மாதத்தில் 187,810 சுற்றுலாப் பயணிகளும், ஒகஸ்ட் மாதத்தில் 164,609 சுற்றுலாப் பயணிகளும், செப்ரெம்பர் மாதத்தில் 122,140 சுற்றுலாப் பயணிகளும், ஒக்ரோபர் மாதத்தில் 135,907 சுற்றுலாப் பயணிகளும், நவம்பர் மாதத்தில் 184,158 சுற்றுலாப் பயணிகளும், டிசெம்பர் மாதத்தில் 248,592 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 16 ஆயிரத்து 974 ஆகும்.

அதன்படி, ரஷ்யாவிலிருந்து 201,920 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 178,339 சுற்றுலாப் பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 136,084 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 131,681 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரேலியாவிலிருந்து 89,573 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 88,772 சுற்றுலாப் பயணிகளும், அமெரிக்காவிலிருந்து 59,532 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# திருமலை மாணவர்கள் படுகொலை குறித்து மீள்விசாரணை வேண்டும்

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 5 தமிழ் மாணவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று மாலை திருகோணமலை கடற்கரையில் நடைபெற்றது.

இராவணன் சேனா அமைப்பின் தலைவர் செந்தூரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

நீதிக்காகக் காத்திருக்கும் சட்டத்திற்குப் புறம்பான இலங்கைப் படுகொலையின் உலகறிந்த சம்பவம் இந்தப் படுகொலைகள். திருகோணமலை கடற்கரையில் 02.01.2006 அன்று இடம்பெற்றது.

திருகோணமலையில் இடம்பெற்ற கைக்குண்டு (கிரனேட்) தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த இலங்கை அரச படையினர், கடற்கரையில் நின்றிருந்த 5 மாணவர்களையும் பிடித்துத் தடுத்து வைத்தனர். பின்னர் அவர்களின் உயிர்களைப் பறித்தனர். கைக்குண்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக, இந்த அப்பாவி மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். சம்பவத்தில் ரொகான், சஜீந்திரன், வசீகர், சிவானந்தன், கேமச்சந்திரன் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட இவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் கைக்குண்டுத் தாக்குதலை நடத்திபோது இவர்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் நிரூபிக்க இலங்கைப் படையினர் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. அப்பட்டமாகத் தெரிந்த இந்த நீதிக்குப் புறம்பான படுகொலைகள் நீதி கேட்டு 19 வருடங்களாக உலக அரங்குகளை உலுக்கி வருகின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முதல் உலகின் முன்னணி மனித உரிமை அமைப்புக்கள் வரையில் இந்த விவகாரம் ஒரு காலத்தில் மிக மும்முரமான மனித உரிமை மீறல் விவகாரமாக இலங்கைக்கு எதிராகக் கையாளப்பட்டது.

கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையார் மருத்துவராக இருந்த காரணத்தாலும் தனது மகனின் படுகொலைக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் அவர் தீவிரமாக இருந்த காரணத்தினாலும் இந்த விவகாரத்தை தனிப்பட்ட முறையிலும் அக்கறை செலுத்தி அவர உலக அரங்கம் முழுவதும் எடுத்துச் சென்றார். ஆனாலும் இன்றுவரையில் நீதி நிலைநாட்டப்படவில்லை. இந்தப் படுகொலைகளை இலங்கையின் அதிரடிப் படையினரே செய்தனர் என்று பின்னர் ஆளும்தரப்பு ஒப்புக்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் காட்டப்பட்டது.

படுகொலைக்குக் காரணமான சந்தேகநபர்களாகச் சில அதிரடிப் படையினர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். ஆனால், போதிய சாட்சியங்கள் முன்வைக்கப்படாமல் அவர்கள் அனைவரும் இலகுவாக வழக்கில் இருந்து விடுதலை பெற்றனர். இந்தப் படுகொலைகளைச் செய்தது அதிரடிப் படையினர்தான் என்று தெரிந்தாலும் அதனை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று முன்னாள் நிதி அமைச்சரும் மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான பஸில் ராஜபக்ச ஒரு தடவை அமெரிக்கத் தூதரிடம் தெரிவித்தார் என்கிற தகவல்களும் கூடக் கடந்த காலங்களில் வெளியாகி இருந்தன.

இலங்கையில் புறக்கணிக்கப்படும் நீதிக்கும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் பாதுகாக்கப்படும் போக்குக்கும் இந்தப் படுகொலைகள் மிகப் பெரும் உதாரணங்களாக இன்றும் நிற்கின்றன. கூட்டுப் பழிவாங்கல் முறையில் இடம்பெற்ற இந்தப் படுகொலைகள் குறித்து முறையான விசாரணை ஒன்று பக்கச்சார்பற்ற விதத்தில் திறமையான அதிகாரிகள் மூலமும் வெளிநாட்டு நிபுணத்துவ ஆலோசனை வழிகாட்டல் துணையுடனும் நடத்தப்படவேண்டும். பகிரங்கமாக இந்தப் படுகொலைகளை நிகழ்த்திவிட்டு தப்பி சமூகத்தில் வாழும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.

தமிழர்கள் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு முறைமை மாற்றத்தைப் பிரதிபலிக்கும் விதமாக அது அமையும் என்று எதிர்பார்க்கலாம். இது போரில் நடந்த குற்றங்கள் அல்ல. இது வேண்டுமென்றே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலை. எனவே இது குறித்து விசாரணை நடத்துவது ஆளும்தரப்பைப் பொறுத்தவரையில் தமது படையினரைக் காட்டிக்கொடுக்கும் செயலாக அமையாது என்பதைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக இந்தப் படுகொலைகள் குறித்த மீள் விசாரணைக்கு உத்தரவிடவேண்டும்.

# மந்திரத்தால் மாங்காய்

**என். சத்திய மூர்த்தி**

இனப்பிரச்சினை ஆகட்டும், இலங்கை-சீனா உறவு ஆகட்டும், எப்போதுமே இந்தியாவும் இந்திய பெருங்கடல் பிராந்தியமும் இரு நாடுகளுக்கு இடையேயான புவிசார் அரசியலில் வெகுவாக அடிபடும். இதில், அனைத்து இலங்கைத் தரப்பினரும் இந்தியாவை குத்திகாட்டுவதும், குத்தி எடுப்பதுமாக, இப்போதைக்கு ஐந்து தசாம்சங்கள் உருண்டோடி விட்டன.

தமிழ் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில், முதல் கோணல் முற்றும் கோணல் என்ற வசனத்திற்கேற்ப, இனப்பிரச்சினை குறித்த இந்தியாவின் கரிசனையை எப்போதுமே தவறாகவே புரிந்துகொண்டுள்ளனர். அதாவது, எழுபதுகளில் புவிசார் அரசியலில், இரு நாடுகளுக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகளின் காரணமாகவே, 1983 தமிழ் படுகொலைகளுக்குப் பின்னர் இந்தியா இங்கே அதீத கவனம் செலுத்தியது என்று கருதியே அவர்கள் அரசியல் செய்தனர்.

உண்மை அதுவல்ல. இந்தியாவைப் பொறுத்தவரையில், அமெரிக்காவை மையமாக்கிய பனிப்போர் காலத்திய இலங்கையுடனான வேறுபாடுகள் அதற்கு புவிசார் அரசியலின் ஒரு பகுதி.

முழு தசாப்தம் சென்ற பின்னர், தமிழ் போராளி குழுக்களுக்கு இந்தியா அளித்த ஆதரவு வேறு. இது எழுபதுகளின் முதல் ஆண்டில் அரங்கேறிய வங்கதேச சுதந்திரப் போராட்டத்தின் அடிநாதத்தில் உருவான இந்தியாவின் கொள்கை மாற்றம். இலங்கைத் தமிழர்களுடன் இருந்த தொப்புள்கொடி உறவும் இதற்கு ஒரு காரணம்.

வெளிப்பார்வைக்கு இரண்டுமே, இந்தியா தனது பிராந்திய 'எதிரிகளுக்கு' செக் வைப்பது போல் தோன்றியது. ஆனால், புது டெல்லி, அண்டை நாடுகளின் உள்நாட்டு பிரச்சினையில் நேரடியாக இராணுவ தலையீடு செய்யக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகத் தொடங்கியது என்பதே உண்மை.

அதேசமயம், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இரண்டு நாடுகளிலும் பாதிக்கப்பட்ட மக்களை தயார்செய்யும் முகமாக அவர்களுக்கு இராணுவ பயிற்சி மற்றும் ஆயுதங்களை அளிக்கவும் இந்தியா தயங்கவில்லை. மூன்று அல்லது நான்கு தசாம்சங்களுக்கு பின்னர் ஐநா சபை முன்னெடுத்த 'ஆர்2பி' என அறியப்படும் அண்டை நாடுகளில் அனாதரவான மக்களை பாதுகாப்பதற்கான பொறுப்பை இந்தியா அன்றே துணிந்து ஏற்றுக்கொண்டது.

### தொண்டர் அடிபொடி

இதில் முதலில் அரங்கேறிய வங்கதேச போரட்டத்தில், பாகிஸ்தான் இந்தியாவை தாக்கியதால் மட்டுமே, இந்திய இராணுவம் நேரடி போரில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. என்ன, இவ்வாறான சூழ்நிலை உருவாகும் என்று கருதவேண்டியது காலத்தின் கட்டாயம்.

எனவே, முக்தி பாகினி எனப்படும் வங்கதேச விடுதலை படையினருக்கு ஆதரவு கொடுத்ததால் பாகிஸ்தான் தாக்கினால், அதனை எதிர்கொள்ளும் விதமாகவே இந்தியா அரசியல் மற்றும் இராணுவ வியூகங்களை அமைத்து வந்தது. அதனால், பாகிஸ்தான் இராணுவ தாக்குதலை மேற்கொண்டதும் அதற்கு இந்தியா பதிலடி கொடுக்கத் தயாராகவே இருந்தது.

அந்த வகையில், பாகிஸ்தான் விமான படை, தலைநகர் புதுடெல்லி உள்ளிட்ட இந்திய நகரங்கள் மீது தாக்குதலைத் தொடங்கியபோது, தனது இராணுவ அனுமானங்கள் மற்றும் முன் உபாயங்களின் அடிப்படையில், இந்தியா அப்போதைய கிழக்கு பாகிஸ்தானை மட்டுமே முக்கியமாகக் குறிவைத்தது. அதனால், பதினாறே நாட்களில் வெற்றியும் அடைந்தது என்பது சமகால வரலாறு.

இது போன்றுதான், 2006ம் ஆண்டில், தளபதி சரத் பொன்சேகா மீது விடுதலை புலிகள் அமைப்பு தற்கொலைபடை தாக்குதலை நடத்தியபோது, இலங்கை இராணுவம், கிளிநொச்சி தலைமையகத்தை தாக்கவில்லை. மாறாக, கிழக்கு மாகணத்திலேயே தனது வான்வழி தாக்குதலைத் தொடங்கியது.

இன்னும் சொல்லப்போனால், கிழக்கு மாகாணத்தில் வெற்றி கண்டு, பின்னர் சில மாத தீவிர சிந்தனைக்குப் பின்னரே, இலங்கை இராணுவம் வட மாகாணத்தில் போரை தீவிரமாக்கியது. விடுதலை புலிகள் அமைப்பின் இராணுவ உத்தியை பற்றி அதீதமாக புகழ்ந்து பேசுபவர்கள், இதுபோன்ற அதன் இமாலய தவறுகளை குறித்து மட்டும் கருத்து கூறுவதில்லை.

அதாவது, எப்போது, வடக்கு மீது முன்னெடுக்கவேண்டிய எதிர் தாக்குதலுக்குப் பதிலாக இராணுவம் கிழக்கை குறிவைத்ததோ, அப்போதே எந்தவொரு தேர்ச்சிபெற்ற இராணுவ தலைமையும் அடுத்து அரங்கேற உள்ள களநிலைகள் குறித்து புரிந்து செயலாற்றி இருக்கவேண்டும். ஆனால், நடந்தது என்ன? தனக்குத் துதி பாடும் அடிமட்ட தொண்டர் அடிபொடிகளாலேயே தனது இராணுவ தலைமையை நிரப்பிக் கொண்ட பிரபாகரனால், எதிர்வரும் நிலைமைகளை யூகித்து உணர முடியவில்லை.

முதல் கோணல் முற்றும் கோணல் என்ற விதத்தில், இந்த அடியில் இருந்து விடுதலை புலிகள் அமைப்பால் இராணுவ ரீதியாகப் பின்னர் எந்தவொரு கட்டத்திலும் முன்னேற முடியவில்லை. ஆனால், இந்த இமாலயத் தவறை இன்றளவும் அந்த அமைப்பின் ஆதரவாளர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக்கொண்டாலும் கிரகித்துக்கொள்ள முடியவில்லை.

### குருவி இருக்க...

இவை அனைத்துமே பிற்கால நிகழ்வுகள். எண்பதுகளில், இங்கிருந்த தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும், அவர்கள், அதிகமாக ரிஸ்க் எடுத்து கடல் கடந்து இந்தியாவில் தஞ்சம் புகுவதைவிட, அவர்களது சொந்த நாட்டில் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்று புது டெல்லி உறுதியாக நம்பியது.

குறிப்பாக தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகளில் ஒரு பகுதியினர், 1983 ஜூலை தாக்குதல்களுக்குப் பின்னர், இலங்கைத் தமிழின மக்களை ஒட்டுமொத்தமாக நாட்டை விட்டு துரத்தி நாடோடிகளாக ஆக்கி விடவேண்டும் என்பதில் தெளிவாக இருந்தனர். அவ்வாறு அவர்கள் மலையகத் தமிழர்களை அனாதைகளாக்கி அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்றிருந்தனர்.

மலையக தமிழர்கள் விடயத்தில் இலங்கை அரசோடு செய்து கொண்ட ஒப்பந்தம், அதன் காரணமாக அரங்கேறிய பேச்சுக்கள், சுயபரிசோதனைகள் முதலிய காரணங்களால், இந்தியாவால், 1983 நிகழ்வுகளின் எதிர்கால தாக்கங்கள் குறித்த சிந்தனை வெகுவாக எழுந்தது. இதன் காரணமாகவே, முன்பு நேர்ந்தது போல் அல்லாமல், இலங்கைத் தமிழ் சமூகம் சிங்கள பேரினவாதிகளை எதிர்கொள்வதை உறுதி செய்ய மட்டுமே புது டெல்லி அவர்களுக்கு ஆயுத பயிற்சி உள்ளிட்ட தயார்படுத்தல்களை முன்னெடுத்தது.

இதற்கும், அமெரிக்கா சார்ந்த இலங்கையின் புவிசார் அரசியலும் சம்மந்தமே இருக்கவில்லை. என்ன, குருவி இருக்க பனம் பழம் விழுந்ததுபோல், இங்குள்ளவர்கள் மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு, அந்த முடிச்சிலேயே தங்களது

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# மந்திரத்தால்......

4ம் பக்கத் தொடர்ச்சி...........

கழுத்தையும்விட்டு,இன்றளவும்முச்சுத்திணறுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், முன்பு அமெரிக்கா இருந்த அதே இடத்தில் சீனாவை வைத்துப் பார்த்து, அதன் காரணமாகவே இந்தியா தங்களுக்கு முழு ஆதரவு கொடுக்கும் என்று முடிவு செய்வது வசதியாக, இலகுவாக இருந்தது. அந்த எண்ணவோட்டமே இன்றளவும் தொடருகிறது.

### காமாலைக் கண்கள்

இதன் காரணமாகவே, தமிழ் தலைமைகளால், இந்தியாவின்இனப்பிரச்சினைகுறித்தகரிசனையையும், இலங்கையுடனான புவிசார் அரசியலையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. காமாலை கண்களுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்ற கணக்கில், அவர்கள் எப்போது தங்களது பேரறிவின் மீது ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு நம்பிக்கை வைத்தார்களோ, அப்போதே அவர்களால், தங்களுடைய கற்பனைகளுக்கும் உண்மை நிலைமைக்கும் உள்ள இடைவெளியை நிரப்பவே முடியவில்லை.

இனப்பிரச்சினையையும் இலங்கை அரசுடனான உறவுகளையும் இந்தியா ஒரு சேரப் பார்த்திருந்தால், தமிழ் தரப்புக்கும் ஜயவர்தனே ஆளும்தரப்புக்கும் இடையிலான பேச்சுக்களை முன்னெடுத்திருக்காது. மாறாக, தொடர்ந்து ஆயுத உதவிகள் மூலமும் சர்வதேச அரசியல் முன்னெடுப்புகளாலும், அன்றைய மிதவாத தமிழ் தலைமைகளின் கோரிக்கைகளை பெற்றுக்கொடுப்பதிலேயே கரிசனை காட்டி இருக்கும்.

அன்றையமிதவாதத்தலைமைகளின்கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்தியா இலங்கை அரசுடன் பேச்சுக்களைமுன்னெடுத்தது.அவற்றைச்செயல்படுத்தும் முகமாகவே, ராஜீவ்–ஜயவர்த்தனே ஒப்பந்தம் மற்றும் பதிமூன்றாவதுதிருத்தம்ஆகியவற்றிற்குஅடிக்கோலிட்டு, அதில் வெற்றியும் பெற்றது.

இல்லை, இந்திய–– இலங்கை ஒப்பந்தம் குறித்து பேச்சு நடத்திய போது, இந்திய தரப்பு, பிரபாகரனை புதுடெல்லி ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கைதி போல நடத்தி, தனது தரப்பை சேர்ந்த யாருடனும் கலந்தாலோசிக்க விடவில்லை என்ற குற்றச்சாட்டு இப்போதும் முன்வைக்கப்படுகிறது. அதனை உண்மை என்றே வைத்துக்கொண்டாலும், பிரதமர் ராஜீவ் காந்தியுடனானஅந்தச்சந்திப்பில்,தனதுபோராளிகளுக்கு மறு வாழ்வு அளிக்கவேண்டும் என்று இந்திய ரூபாய் ஒன்பது கோடி பெற்றுக் கொண்டது யார்? இது போன்ற பண உதவி இந்திய தரப்பிடமிருந்து தொடர வேண்டும் என்று வாக்குறுதி பெற்றுக் கொண்டவர் யார்?

இந்தக்கேள்விகளுக்கானபதில்குறித்துயோசித்தால், யார், யாரை ஏமாற்றினார்கள், யார் யாரை முதுகில் குத்தினார்கள் என்ற கேள்விகளுக்கு விடை தானாகவே கிடைக்கும். ஆனால், இங்குள்ளவர்கள் வழக்கம் போலவே, தங்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் எந்தவொரு சிந்தனைக்கும் இடம்கொடுக்காமல் தசாப்தங்களாக இயந்திர மனிதர்களாக, ரோபோக்களாக இயங்கி வந்துள்ளனர்.

அந்தக் காலகட்டத்தில், மிதவாத தமிழ் தலைமைகள் மற்றும் பிற போராளி குழுக்களைப் புறம்தள்ளிவிட்டு, 'தானே ராஜா, தானே மந்திரி' என்று விடுதலை புலிகள் அமைப்பும் பிரபாகரனும் தங்களுக்கு தாங்களே தமிழர்களின் ஏகப் பிரதிநிதி என்று மகுடம் சூட்டிக்கொண்டதைபுதுடெல்லிஎதிர்பார்த்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது. இடைப்பட்ட காலத்தில், தமிழ்த் தலைமைகளும், குறிப்பாக விடுதலை புலிகள் அமைப்பு உள்ளிட்ட போராளிக் குழுக்களும் தங்களது போராட்டங்களை வங்க தேச விடுதலையுடன் உருவகப்படுத்திக் கொண்டு, தங்களது நிறைவேறாத ஆசைகளையும் எதிர்பார்ப்புகளையும் வளர்த்துக் கொண்டதைவேண்டுமானல்புதுடெல்லிதடுத்திருக்கலாம் என்ற வாதம் அவ்வப்போது முன்வைக்கப்படுகிறது. ஆனால், இந்தியா விடுதலை புலிகள் அமைப்பு உள்ளிட்ட தமிழ் தலைமைகளின் வாய்மொழி கூற்றை உண்மை என்றே நம்பியது. அதற்கான பயனையும் அனுபவித்தது.

இதன் காரணமாகவே, முதல் கோணல் முற்றும் கோணலாகிவிட்டது. இதற்குஇந்தியாவேகாரணம்என்று கருதி தமிழர் தரப்பு இன்னமும் செயல்படுவதால்தான், இந்தியா தங்களிடமிருந்து விலகி பயணிக்கிறதோ என்ற அச்சமோ, ஆதங்கமோ அவர்களை குழப்பி வருகிறது. இந்த நிலை மாற வேண்டுமானால், தமிழ் தலைமைகள் ஒருங்கிணைந்து எந்தவித எதிர்பார்ப்புகளும் இல்லாமல், இந்தியாவுடன் மனம் திறந்து பேச வேண்டும். அதன் அடிப்படையில், செயலாக்க முடிந்த செயல் திட்டங்களை மட்டுமே முன்னெடுக்க வேண்டும்.

### பழைய கதை

இனப்போர் முடிந்து பதினைந்து ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில், அடுத்த தலைமுறை தமிழ் இளைஞர்கள், பழைய கதைகளையும், கட்டுகதைகளையும் மீட்டெடுத்து அவற்றின் உண்மைத் தன்மைகளை ஊன்றறிய முயல வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்தால் மட்டுமே, அவர்கள் தற்போதைய தமிழ் அரசியல் மாயையில் இருந்தும், இன்னமும் மந்திரத்தால் மாங்காய் வரவழைப்போம் என்று பறைசாற்றும்தமிழ்அரசியல்தலைமைகளில்இருந்தும் தங்களது எதிர்காலச் சந்ததிகளைக் காப்பாற்ற முடியும்.

இதற்காக, தமிழர் உரிமைகளை விட்டுக்கொடுத்து அடிமைகளாக வாழவேண்டும் என்பதல்ல பொருள். மாறாக,உணர்ச்சிபூர்வமாகமட்டும்இனப்பிரச்சினையை அணுகாமல்,திட்டமிட்டசெயலாற்றலால்எவ்வாறெல்லாம் அந்த உரிமைகளை மீளப்பெறமுடியும் என்பதை கணக்கிட்டு, உள்நாட்டு அரசியலோடு பயணித்து தனது இலங்கை அடையவேண்டும்.

இதில், தனி நாடு, அல்லது சமஷ்டி என்பன போன்ற கருத்துக்கள் இடம்பெற்றால், அவை எந்தக் காலத்திலும் வெற்றி அடையாது. மாறாகச், சுதந்திரமாகத் தங்களது உரிமைகளைப் பெறுவதற்கு அடி மேல் அடி எடுத்து வைத்துச் செயலாற்றினால், அதில் அடுத்தடுத்த காலகட்டங்களில் தவணை முறையிலாவது வெற்றி பெறலாம்.

இங்கு தவணை முறை என்று கூறுவது தென்னிலங்கையிடம் உரிமைக்காக பிச்சை எடுப்பது என்பதல்ல பொருள். அடுத்தடுத்த அரசமைப்பு திருத்தங்களால்தங்களதுநீண்டகாலகோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வது என்பதே அதன் அர்த்தம்.

அரசியல் ரீதியாகவோ, நீள்பட்ட போராலோ அல்லது தீவிரவாத தாக்குதல்களாலோ பெற முடியாத உரிமைகளை உடன் இருந்து கெடுத்தே பெறமுடியும் என்பதை நம்மவர்கள் இதுவரை உணர்ந்தார்கள் இல்லை. இந்தப் புத்தாண்டில் அவர்களுக்கு அந்த ஞானம் வந்தால், அதுவே முதல் படி





# ஈழத்துச் சிதம்பர ராஜாதி ராஜர்



காரைநகர்மண்ணுக்குதனிச்சிறப்புஉண்டு.சமயப்பிடிப்பில் காரை மக்களுக்கு நிகர் அவர்களே.

பாரம்பரியம் - மரபு இவைகளில் ஆழ்ந்த பிடிப்பு, விஸ்தாரமான கிரியை வழிபாடுகளோடு கூடிய ஆலய வழிபாடு இவை எல்லாம் காரை நகரின் தனித்துவங்கள்.

அந்தநகரின்பெருவிழாவானஈழத்துசிதம்பரதிருவாதிரைத் தேரோட்டம் நேற்று நிகழ்ந்தது.

அந்தரதஉத்ஸவத்தின்போதுஅடாதுமழைபொழிந்தாலும் வெள்ளமோடினும் காரை நகர் பக்தர்கள் காட்டும் பக்திமை வியப்பூட்டும்.

இந்த கோயிலின் மரபு வழி சிவாச்சார்யர்களாக விளங்கிய கணபதீஸ்வரக்குருக்கள் போன்றோரும் அதற்கிணையான பக்திமையும்அறிவொழுக்கமும்கொண்டவர்களாகவிளங்கினர்.

ராஜாதி ராஜரான நடராஜ ராஜர் ஆனந்த தாண்டவத்தோடு சபையிலிருந்து எழுந்தருளி விட்டால் தேரேறி உலா வந்து மறுநாள் மஹா அபிஷேகம் கண்டு தீர்த்தவாரி நிகழும் வரை குருக்கள்மார் பசி, உறக்கம் எல்லாம் மறந்து போவார்களாம்.

பல்வேறு பூசுர குடும்பங்களும் தமிழகத்திலிருந்து முதலில் குடியேறிய ஊர் காரைநகர் தான்.

இந்த ஊர் மக்கள் அமைச்சரானாலும் பெரிய பதவிகளை அடைந்தாலும் நெற்றி முழுக்க நீறணிய மறக்க மாட்டார்கள். தங்கள் கோயில் சுவாமிக்கு செய்ய வேண்டியதை, பிதிர்கடமைகளை சரிவரச் செய்வார்கள்.

இத்தகு காரை நகர மக்களின் பெருங்கோயிலில் நேற்று தேரேறிய ஆனந்த கூத்தர் இன்று அதிகாலையில் மகா அபிஷேகம் கண்டு தீர்த்தவாரி காண்கிறார்.

இங்கு காணப்படுகின்ற நடராஜர் திருவுருவம் மிகவும் சிறப்பானது. வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் நடராஜப்பெருமானின் திருவடியின் இரு மருங்கிலும் தொழுதேத்த, ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்டவட்டத்திருவாசிக்குள்நடராஜப்பெருமான் திருநடனம் புரியும் விதமாக வார்க்கப்பட்டுள்ளது.

இத்திருவுருவத்தை ஈழத்துச்சிதம்பரத்திலேயே தங்கியிருந்து வார்த்துக் கொடுத்தவர் சோழபுரத்துக் குருசாமி ஆசாரியார் அவர்கள்.

மேலே குறிப்பிட்ட நடராசர் திருவுருவம் இந்தியாவிலே ஓரிரு இடங்களிலே மட்டும் காணப்படுவதாக, சிற்பக்கலையில் நிபுணரான தொ.மு பாஸ்கரத் தொண்டமான் கூறியுள்ளார். இவர் 1963 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தை தரிசித்த பின்பு அழகும் அற்புதமும் திருவருளும் நிறைந்த நடராசர் திருவுருவத்தைப் பற்றி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் புரியும் ஐந்தொழில்களையும் தெளிவாகவும் இலகுவாகவும் ஒருங்கே காட்டுவது நடராஜ வடிவம்.

சைவ சமய மரபில் சில ராஜாக்கள் உள்ளனர். காவிரித் தென்கரைத் தலத்தில் விளங்கும் பதியாகிய திருவாரூர் தியாகராஜர் ஒரு ராஜா ! காவிரியின் வடகரையில் விளங்கும் பதியாகிய சிதம்பரத்தின் நடராஜர் ஒரு ராஜா !

இவ்விரும் ஆதிரையர்கள். அதாவது , இருவருமே ஆதிரை நாளில் விழாக் காண்பவர்கள்.

தில்லையில் ஆனந்த தாண்டவம். தியாகரின் நடனம் அஜபா தாண்டவம். தில்லை பொற்கோயில் ஆரூர் பூங்கோயில்.

தில்லைப் பெருமான் ஆகாச வடிவினர் என்றால், திருவாரூர் பெருமான் பூமி வடிவினர். இரண்டு இடங்களிலும் ஆயிரம்கால் மண்டபம் உள்ளது.

தில்லையிலும் திருவாரூரிலும் மூலலிங்கத்திற்கு 'மூலட்டானேஸ்வரர்' என்றே பெயர்.

இருபெருமானும், அடியவர்களின் பெருமையைப் புகழ்ந்து பாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர் பெருமான் சுந்தரருக்கு ' தில்லைவாழ் அந்தணர் ' என்று அடியெடுத்துக்கொடுக்கதில்லைக்கூத்தரோபெரியபுராணம் பாட ' உலகெலாம் ' என்று அடியெடுத்துக் கொடுத்தார்.

திருவாரூர் பெருமான் தில்லை எனும் சிதம்பரத்தை அடியெடுத்துக் கொடுக்க தில்லையெம்பெருமானோ ' உலகம்' எனும் பிருத்வி தத்துவத்தை (திருவாரூரை) உணர்த்தும் விதமாக அடியெடுத்துக் கொடுத்தார்.

இரண்டு இடங்களிலும் பதஞ்சலி மற்றும் வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் பாததரிசனம் பெற்றனர்!

இந்த வகையில், பார்த்தாலும் ஈழத்துச் சிதம்பரம் என்ற காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் தனிச்சிறப்பு பெறுகிறது.

இங்கு மார்கழி மஹா உத்ஸவத்தில் தில்லைக் கூத்தர் திருத்தேரில்பவனிவருகிறார்.பங்குனிஉத்தரமஹோத்ஸவத்தில் தியாகராஜரான சோமாஸ்கந்தர் தேருலாக் காண்கிறார். இங்குள்ள இவ்விரு மூர்த்திகளுக்கும் தனிச்சிறப்புடைய அற்புத வரலாற்றுக்கதைகள் உள்ளன. மூலவரோ மதுரை போல சுந்தரேசுவரராக விளங்குகிறார்.

தவிரவும், மாணிக்கவாசகப்பெருமானைக்கொண்டாடுவதில் காரைநகராருக்கு நிகர் இல்லை. எண்பதாண்டுகள் பழைமையான மாணிக்கவாசகர் சபை இங்குள்ளது.

கோயில் வசந்த மண்டபத்தில் திருவெம்பாவை காலத்தில் இச்சபையால் நிகழ்த்தப்படும் மணிவாசகர் விழாவும் அவ்வப்போது நிகழ்த்தப்படும் திருவாசக முற்றோதல்களும் புகழ்பெற்றன.

தமிழகத்திலும் காரைக்குடி, காரைக்குறிச்சி, காரைக்கால் என்று பல ஊர்கள் உள்ளன. இலங்கையிலும் கிழக்கில் காரைதீவு உள்ளது.

ஆனால், இந்த காரைதீவு அரச ஆவணங்களிலும் காரைநகர் என்றே பதிவாகியுள்ள தனிச்சிறப்புடையது. அவ்வாறு காரைநகரென அரசாணை பிறப்பிக்கப்பட்டும் இந்த ஆண்டு (1923- 2023) நூற்றாண்டு காண்கிறது.

ஆக, ஊக்கமும் தொழிலார்வமும் மிக்க காரைநகரார் சைவ மரபிலும் மிகுந்த பிடிப்போடு இங்குள்ள ஐயனாரையும் ஆடவல்ல பெருமானையும் போற்றி வளமோடு வாழ்கிறார்கள்.

அந்த ஈழத்துச்சிதம்பர ஆனந்தக் கூத்தர் எங்கள்



உள்ளங்களிலும்இல்லங்களிலும்ஆனந்தம்தவழஅருளட்டும்!!

பாலாலயம் செய்யப்பட்டுள்ள ஈழத்துச்சிதம்பரம் விரைவில் திருப்பணிகள் நிறைவேறி மகா கும்பாபிஷேகம் காணவும் முன்னைச் சிறப்புகளோடு பெருவிழாக்கள் நிகழ்வும் சிவபெருமான் அருளட்டும் !!

ஹர ஹர மஹா தேவ !!

**ஸ்ரீ சிவஸ்ரீ. தி. மயூரகிரி சிவாச்சார்யார்**



காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை ஆதார வைத்தியாசாலைக்கு பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ வருகை

(தில்சாத் பர்வீஸ்)

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான வசந்த பியதிஸ்ஸ எம்.பி. சம்மாந்துறை ஆதார வைத்தியாசலைக்கு புதன்கிழமை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.





குறித்த விஜயத்தின் போது, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டிபிரபாசங்கர், வைத்தியசாலையின் அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர்ஆகியோர்இணைந்து சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் மிக நீண்ட காலமாக மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாமல் காணப்படும் கட்டடத்தை மக்கள் பாவனைக்கு வழங்குவதற்கான நடவடிக்கையையும், வைத்தியசாலையின் அபிவிருத்திக்கான நடவடிக்கையையும் அமைச்சின் ஊடாக பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன்,சம்மாந்துறைஆதாரவைத்தியசாலையின்வைத்திய அத்தியட்சகர்டாக்டர் டிபிரபாசங்கர், வைத்தியசாலை அதிகாரிகள் மற்றும் சம்மாந்துறை வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர்களுடன் சென்று வைத்தியசாலையின் சுற்றுச்சூழலையின் நிலைமைகளையும் பார்வையிட்டார்.

இதன்போது,வைத்தியசாலைஅபிவிருத்தி மற்றும் குறைநிறைகள் தொடர்பான உயர்மட்டக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை முழுவதும் இந்திய திரைப்பட விழா

## திங்கள் முதல் தொடங்குகிறது

நாட்டிலுள்ள சகல நகரங்களிலும் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் இந்திய திரைப்பட விழா இடம்பெறவுள்ளதாகக் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 10ஆம் திகதி வரை இத்திரைப்பட விழா இடம்பெறவுள்ளது.

6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6:30 மணிக்கு கொழும்பில் உள்ள பிவிஆர் சினிமாவில் பாலிவுட் ஹிட் ‘83’ திரையிடலுடன் விழா தொடங்கவுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும்கண்டி, அம்பாந்தோட்டை மற்றும்யாழ்ப்பாணத்தில் உள்ள துணை உயர்ஸ்தானிகராலயங்கள் கொழும்பு சுவாமி விவேகானந்தர் கலாசார மையத்துடன் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

இவ்விழாவில் நாடகம், காதல், சண்டைக்காட்சி மற்றும் வரலாற்றுக் காவியங்கள் அடங்கிய செழுமையான திரைப்படங்களின் தொகுப்பு வழங்கப்படவுள்ளது.

இந்தத் திரைப்படங்கள் இந்திய சினிமாக்களின் பன்முகத்தன்மை மற்றும் அதிர்வைக் கொண்டாடுவதாக அமையும். பார்வையாளர்களுக்கு அவர்களின் பன்முக மரபுகளைப் பற்றிய ஒரு நோக்கையும் வழங்கும்.

கொழும்பிற்கு மேலதிகமாக, பதுளை, யாழ்ப்பாணம், காலி, குருணாகல், மாத்தளை, மாத்தறை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலும் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது.

# புத்தளத்தில் குருதிக்கொடை

(சியாஜ்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளை, புத்தளம் பெரிய பள்ளி, புத்தளம் வியாபார சங்கம், நஹ்தா அமைப்பு புத்தளம் நகர சபை, புத்தளம் தள வைத்திய சாலை மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்த தானம் நிகழ்வு சனிக்கிழமை புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள கிளினிக் சென்டரில் காலை 08.30 மணி தொடக்கம் 2.30 மணிவரை இடம்பெற உள்ளது.

உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம் என்ற அடிப்படையில் அனைவரும் வருகை தந்து தங்களின் உதிரத்தை கொடுத்து மற்றவர்களின் உயிர்களை காப்போம். என்பதுடன் உதிரம் கொடுப்பவர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னம் வழங்கப்படும் எனவும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளையின் உப செயலாளர் அஷ்ஷேக் இமாம்தீன் அஷ்ரபி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது .

# புதிய ஜனாதிபதி அநுரவுக்கு பாபு சர்மா நன்றி தெரிவிப்பு

ஆங்கில புத்தாண்டான 2025 ஆம் ஆண்டு புது வருட ஆரம்ப நிகழ்வும் சத்தியபிராமணமும் ஜனாதிபதி அனுர குமார திசைநாயக்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் முன்றிலில் நடைபெற்றது. இதன் போது பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மத தலைவர்கள் பிரசன்னாமகியிருந்தனார்.

வருகைத்தந்த ஜனாதிபதி முதலில் மத தலைவர்களை வணங்கிகொண்டார் . கடந்த ஐந்து வருடங்களாக சர்வமத தலைவர்களின் பிரசன்னம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவில்லை இந்த நிலையில் புதிய ஜனாதிபதி அனுர, அணைத்து மதங்களையும் மதிக்க வேண்டும் அனைத்து இனங்களையும் சம நோக்கோடு பார்க்கவேண்டும் என்ற அடிப்படையில் சர்வமத தலைவர்கள் அழைக்கப்பட்டு புதுவருட நிகழ்வில் கௌரவ பிரசன்னம் ஏற்படுத்தப்பட்டது என சர்வதேச இந்துமத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஜனாதிபதிக்கு பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.





### வவுனியா மாவட்டத்தில்

# ‘தூய ஸ்ரீ லங்கா’ வேலைத்திட்ட உறுதியுரையுடன் பாடசாலை முதல் நாள் ஆசிரியர் பணி ஆரம்பம்

தேசிய ரீதியில் இவ்வாண்டு முதலாம் திகதி முதல் க்ளீன் ஸ்ரீலங்காவேலைத்திடம்ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.





வவுனியா மாவட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களும் பாடசாலையின்இவ்வாண்டுக்கான முதல் நாளில் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கான உறுதியுரையை எடுத்துக் கொண்டனர்.

அதற்கமைவாக, வவுனியா தெற்கு வலயத்தின் அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் பாடசாலை காலை ஒன்று கூடலின் போது பாடசாலை அதிபர் எம்.எம்.அன்பஸ் தேசிய கொடியை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர்கள் க்ளீன் ஸ்ரீலங்கா என்ற உறுதியுரையை எடுத்துக் கொண்டதுடன் தமது கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில், அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(100)

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி மாவட்டத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் விவசாயிகள் – வடிகாலமைப்பு சபை இடையில் தர்க்கம்

கிளிநொச்சி மாவட்டத்துக்கான குடிநீர் விநியோகம் தொடர்பில் விவசாயிகளுக்கும் தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையினருக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை தெளிவூட்டும் வகையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) கிளிநொச்சி கோவிந்தன் கடை சந்தையில் அமைந்துள்ள திட்ட முகமைத் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

அதாவது, கிளிநொச்சி மாவட்டத்துக்கான குடிநீர் வினியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் நீர்வழங்கள் வடிகாலமைப்பு சபையால் குடிநீர் விநியோகத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையிலே குடிநீர் விநியோகத்துக்குரிய நீரை இரணைமடுக்குளத்திலிருந்து பெற்றுக் கொள்வது தொடர்பில் விவசாயிகளுக்கும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினருக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றதையடுத்து இதனை தீர்க்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் விவசாயிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.







# விதிமுறைகளை மீறிய 5,415 சாரதிகள் மீது நடவடிக்கை

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கைக்கு அமைய மதுபோதையில் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட போக்குவரத்து வீதி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 5,415 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். ஆகையால் பொதுமக்களும், சாரதிகளும் வீதி விதிமுறை சட்டங்களை முறையாக பின்பற்றுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

பண்டிகை காலங்களில் ஏற்படும் வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் பொலிஸாரால் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய நாடளாவிய ரீதியில் கடந்த 23 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய புதன்கிழமை காலை 6 மணி முதல் வியாழக்கிழமை காலை 6 மணி வரையிலான நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்து கண்காணிப்பில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 509 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கவனக்குறைவாகவும் அபாயகரமாகவும் வாகனம் செலுத்திய 29 சாரதிகள், அதிக வேகத்தில் வாகம் செலுத்திய 59 சாரதிகள், விதி மீறல்களில் ஈடபட்ட 762 சாரதிகள், சாரதி அனுமதிபத்திர உரிமை மீறல் தொடர்பில் 345 சாரதிகள் மற்றும் ஏனைய போக்குவரத்து விதிமீறல்களுடன் தொடர்புடைய 7,264 சாரதிகள் உள்ளடங்களாக 5,415 சாரதிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில், அதனை தடுக்கும் வகையில் இந்த போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். பொதுமக்களும், சாரதிகளும் வீதி விதிமுறை முறையாக பின்பற்றுமாறும் பொலிஸார் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

# மாற்றுத்திறனாளிகளினது உரிமை மறுக்கப்படுகிறது

## யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு



இலங்கை அரசமைப்பு மற்றும் சுற்றுநிருபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும் நடைமுறையில் அது மறுக்கப்படுவதாக இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார்.

அண்மையில், சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளை பாதுகாக்கும் முகமாக உரிமைகளை இழக்கும் விளிம்பில் உள்ளவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வருகிறது.

அந்தவகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கையில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு விசேட வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் கல்விகற்பதிலிருந்து தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வது வரை அவர்களுக்கான ஏற்பாடுகள் அரசமைப்பு மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டும் அவர்கள் நடைமுறையில் பல்வேறு பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பாககூறவேண்டுமானால் இலங்கை அரசவேலைவாய்ப்பை பெறுபவர் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும் என கூறப்படுகிறது அதுமட்டுமல்லாது தேக ஆரோக்கியம் தொடர்பிலும் வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக அமைகிறது.

இவ்வாறான நிலையில் மாற்றுத்திறனாளிகளின் உரிமை களை பாதுகாக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கத்திற்கு 9 பிரிவுகளின் கீழ் விரிவான அறிக்கையொன்றினை வழங்கியுள்ளது.

குறிப்பாக வலுவிழந்தவர்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது அவர்களுக்கான வேலை வாய்ப்பினை எவ்வாறு வழங்குவது சித்திரை வகைகளில் இருந்து அவ்வாறு பாதுகாப்பது மற்றும் பாரபட்சங்களில் இருந்து எவ்வாறு விடுவிப்பது போன்ற விடயங்களை உள்ளடக்கி மனித உரிமைகள் ஆணைக்குழு விசேடமான ஒரு வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது.

அரசகட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் அல்லது வலுவிழந்தவர்கள் தாமாக சென்று தமது சேவைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் இருந்தும் தற்போது புதிய கட்டடங்கள் கட்டப்படும் போது குறித்த நடைமுறைகளை கடைப்பிடிப்பது குறைவாக உள்ளது.

ஆகவே வட மாகாணம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் பல ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் உள்ள நிலையில் அவர்களின் தேவைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜன. 7 முதல் 10 வரை நாடாளுமன்ற அமர்வு

நாடாளுமன்றத்தை எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை (டிசெ. 31) நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய ஜனவரி 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை 'மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை 2024' தொடர்பில் ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

ஜனவரி 8ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (4 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மு.ப 10.00 மணி முதல் 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக (5 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழானஒழுங்குவிதிஎன்பனவிவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அன்றைய தினம் மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.





ஜனவரி 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மு.ப 10.30 மணி முதல் மு.ப 11.30 மணி வரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச்சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஆறு கட்டளைகள், நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதிக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணி வரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

ஜனவரி 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இதற்கமைய மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, எச்.நந்தசேன மற்றும் டியூடர் குணசேகர ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளுக்காக அன்றைய தினம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மேலும் தெரிவித்தார்.

## வழங்கிய வாக்குறுதிக்கமைய எதிர்பார்ப்பை நிறைவேற்றுக

### அரச ஊழியர்களுக்குப் பிரதமர் அறிவுரை

அரச ஊழியர்களாக வழங்கிய வாக்குறுதிக்கமைய பணியாற்றி 2025ஆம் ஆண்டினை மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் ஆண்டாக மாற்ற வேண்டுமென கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் பிரதமர் கலாநிதி ஹரினி தெரிவித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் செயற்படும் தொழிற் கல்வி பிரிவு உட்பட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றில் இடம்பெற்ற புதிய வருடத்திற்கான பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சின் வளாகத்திலுள்ள அனைத்து பிரிவுகளுக்கும் சென்ற பிரதமர், கடமைகளின்போது அதிகாரிகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தனது அவதானத்தை செலுத்தினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் தெரிவித்ததாவது:

நாட்டைச் சரி செய்யும் பணியை ஆளும்தரப்பால், கட்சியால் அல்லது அரசியல் அதிகாரத்தால் மாத்திரம் செய்யக்கூடிய ஒன்றல்ல. அதற்கென நாட்டு மக்கள் உட்பட நாட்டின் அனைத்து பிரிவுகளும் ஒன்றிணையவேண்டும்.

அரச ஊழியர்களாக மக்களுக்குச் சேவையாற்றும் விசேட பொறுப்பு உங்களுக்குள்ளது. சூழலை சுத்தப்படுத்துவது மாத்திரம் 'தூய ஷ்ஷ்சிறீ லங்கா' வேலைத் திட்டத்தின் நோக்கம் அல்ல. மக்கள் சமூகத்தின் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் இதில் உள்ளடங்கும். கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சுக்கு இது தொடர்பில் விசேட பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரச சேவை தொடர்பில் காணப்படும் மோசமான சித்தரிப்பை மாற்றி நல்லதொரு சித்தரிப்பை ஏற்படுத்துவதற்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் இடமாக அரச சேவையை மாற்றியமைக்க வேண்டும். கல்வித் துறையில் தொழிற் கல்வியை விசேட ஒன்றாக மாற்றுவது அரசின் இலக்காகும்.

மனச்சாட்சிக்கு அமைவாகப் பணியாற்ற நாம் உங்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம். இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற அபிப்பிராயத்தைக் கொண்டுள்ள அரச ஊழியர்களுக்கு உச்சகட்ட ஒத்துழைப்பையும், பாதுகாப்பையும் நாம் வழங்குவோம்.

சிறந்த பண்புகளைக் கொண்ட கல்வி முறையை நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதன் மூலம் கல்வியின் ஊடாக அறிவுப் பரிணாமத்தை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான பல நிறுவனங்கள் கல்வியமைச்சிற்கு சொந்தமானதாக உள்ளன. தொழிலை மாத்திரம் செய்யும் பட்டதாரியாக அன்றி, நாட்டை மாற்றியமைக்கக்கூடிய அறிவுக் கூர்மையுடைய மற்றும் கலாசாரக் கடமைகளை நிறைவேற்றும் பட்டதாரியே நாட்டிற்கு தேவையாகும் என்றார்.

## முன்னாள் மாகாணசபை உறுப்பினரால் இறக்குமதி செய்யப்பட்ட 3 'ஜீப்'கள் மீட்பு

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஒருவரால், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட இராணுவ ஜீப்களைஒத்தமூன்றுவாகனங்கள்வலானமத்திய இலஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப் பட்டுள்ளது.

பாணந்துறை , பிங்வத்த பிரதேசத்தில் வசிக்கும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஜீப் வாகனம் ஒன்றை பயன்படுத்துவதாக பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்பு பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்குச் சொந்தமான ஜீப் வாகனம் ஒன்று பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்பு பிரிவினரால் கடந்த 31 ஆம் திகதி கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்குச் சொந்தமான மேலும் இரண்டு ஜீப் வாகனங்கள் பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்பு பிரிவினரால் புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.



கைப்பற்றப்பட்ட மூன்று ஜீப் வாகனங்களும் சட்டவிரோதமாக இலங்கைக்குஇறக்குமதிசெய்யப்பட்டவை என விசாரணைகளில் தெரியவந்துள்ளன.





கைப்பற்றப்பட்ட மூன்று ஜீப் வாகனங்களும் பிங்வத்த பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை வலான மத்தியஊழல்தடுப்புபிரிவினர்மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் 'புனித புஹாரி செரீப்' பாராயணம் ஆரம்பம்

(ஸாகிர்)

சாய்ந்தமருது ஜுஂம்ஆ பெரிய பள்ளிவாசலில் பாரம்பரியமாக இடம்பெற்றுவரும் 'புனித புஹாரி செரீப்' பாராயணம் நேற்று ( வியாழக்கிழமை) அதிகாலை இப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா (ரஷாதி)யினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜுஂம்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் பிரதித் தலைவர் எம்.எம்.எம்.இஸ்மாயில் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜுஂம்ஆப் பெரிய பள்ளிவாசல் மரைக்காயர்மார்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், ஜமாஅத்தினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.





# கிழக்கு உள்ளாட்சி ஆணையராக அஸ்மி புதனன்று கடமையேற்பு

(அபு அலா)

இலங்கை நிருவாக சேவையின் மூத்த அதிகாரியான ஏ.எல்.எம்.அஸ்மி கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவால் நியமிக்கப்பட்டு புதன்கிழமை கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

அஸ்மியின் சேவைத்தரம், தகுதி மற்றும் உள்ளூராட்சி நிர்வாகத்தில் ஒரு தசாப்தகால அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலும் உள்ளூராட்சி நிர்வாகத்தின் வளர்ச்சிக்கு வழங்கிவந்த தலைமைத்துவ வழிகாட்டுதல்கள், நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு திறமைகள் என்பவற்றை கருத்திற்கொண்டே இந்நியமனம் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் ஒரு சிறந்த உள்ளூராட்சி மன்றமாக அக்கரைப்பற்று மற்றும் கல்முனை மாநகர சபைகளை மிளிரச்செய்வதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஒருவராவார்.

பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர், அக்கரைப்பற்று மாநகராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரும், பதிவாளரும், கல்முனை மாநகராட்சி ஆணையாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) போன்றவற்றில் இவர் கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ கடமை தொடக்க நிகழ்வுகள் கிழக்கு மாகாண முதலமைச்சு அலுவலகத்தில்

(அபு அலா, மட்டு.துஷாரா)

புதுவருடப் பிறப்பு மற்றும் ’கிளீன் ஸ்ரீலங்கா’ கடமை ஆரம்ப நிகழ்வு கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம்.பைஷல் தலைமையில் மாகாண வளாகத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த ’கிளீன் ஸ்ரீலங்கா’ முதல்நாள் ஆரம்பம் நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சு, சுகாதார அமைச்சு, சுதேச மருத்துவ திணைக்களம், சட்டப்பிரிவு, சமூக சேவைகள் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், சுற்றுலாத்துறை பணியகம், தேசிய கணக்காய்வுத் திணைக்களம் (உள்ளகப்பிரிவு) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு போன்ற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் ’கிளீன் ஸ்ரீலங்கா’ என்ற திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.



2025 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப நிகழ்வை கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம்.பைஷல் தேசியக் கொடியையும், சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.பி.மதநாயக்க மாகாண கொடியையும் ஏற்றிவைக்கப்பட்ட பின்னர் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற ’கிளீன் ஸ்ரீங்கா’ தேசிய வேலைத்திட்ட நிகழ்வு நேரலை மூலம் ஒளிபரப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



## பசுமைசூழல் உருவாக்கலும் கற்றலுக்கான ஊக்குவிப்பும்

கிளிநொச்சி கணேசபுரம் சனசமூக நிலையத்தின் பசுமைச்சூழலை உருவாக்கலும் மாணவர்களின் கற்றலுக்கான ஊக்குவிப்பு நிகழ்வு கணேசபுரம் சனசமூக நிலையத்தில் புதன்கிழமை நடைபெற்றது. குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் பங்குகொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்கதிபர் எஸ்.முரளீதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப் பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.01.2025இல் வெளியிடப்பெற்றது